Registered as a Newspaper in Ceylon * ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் [9
இதழ் 318
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 31 றஜப். 12 செவ்வாய்க்கிழமை [17-10-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# 1967-ல் நெல் விளைச்சல் இலக்கை தாண்டிவிட்டது

## முற்றிலும் மாறுபட்ட முறை ஏற்படுத்திய வெற்றி

கொட்டாஞ்சேனை, திங்கள்

**1967-ம் வருடத்தில் விவசாய உற்பத்தி அதிகரிப்பதற்கான அரசாங்கத்திட்டங்கள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றதால் குறிப்பிடத்தக்க விளைச்சல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1966-67-ம் வருட பெரும்போக விளைச்சல் பல அம்சங்களில் வெற்றிகரமாகக் காணப்பட்டுள்ளதுடன் உற்பத்தி இலக்கைத் தாண்டியுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்க தகவல்பகுதியினர் வெளியிட்டுள்ள இந்த விபரத்தில் ஏக்கருக்கு சராசரி 40.34 புசல் வீதம் இப்பெரும்போக பருவத்தில் விளைந்ததாகவும் மொத்தம் 3 கோடியே 44 லட்சம் புசல் நெல் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1968-ம் ஆண்டுக்கான நெற்பயிர் இதர உணவுப் பயிர் ஆகியவை சம்பந்தமான விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னைய ஆண்டுகளைப் போலல்லாமல் முற்றிலும் மாறுபட்ட முறையில் தயாரிக்கப்பட்டதாகவும் தகவல்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகளுக்குப் புதிய கடனுதவித்திட்டம் சென்ற மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மோட்டார் வாகனத்தை

## டாக்சியாக்குவதற்கு புதிய முறை

யாழ்ப்பாணம், செவ்வாய்

டாக்ஸியாக மோட்டார் வாகனங்கள் பதிவு செய்வதற்கு முன்னர் பெர்மிட் பெறவேண்டுமென்ற அடிப்படையில் ஒரு புதிய திட்டத்தை செயற்படுத்த மோட்டார் போக்குவரத்து பகுதியினர் போக்குவரத்து அமெச்சுடன் கலந்தாலோசித்து வருவதாக தெரியவருகின்றது.

இப்புதிய முறை பற்றி மோட்டார் போக்குவரத்துப் பகுதியைச் சேர்ந்த அதிகாரியொருவர் பம்பாய் சென்று பயின்று வந்ததாகவும், அங்குள்ள முறைகள் பற்றி அறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இப்போதுள்ள முறைப்படி ஒரு மோட்டார் வாகனத்தை விரைவில் டாக்ஸியாக மாற்றிவிடலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கவர்னர் ஜெனரல் தமிழகத்துக்கும் செல்வார்

கொழும்பு, திங்கள்

இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவும் திருமதி கோபல்லவாவும் இந்தியாவுக்கு இம் மாதம் 21-ந் திகதி முதல் நவம்பர் 2-ந் திகதிவரை உத்தியோகபூர்மானவிஜயத்தை மேற்கொள்ளும்போது பம்பாய், டில்லி, பங்களூர், சென்னை ஆகிய இடங்களுக்கும் பிரசித்திபெற்ற பெளத்த விகாரைக்கும் விஜயஞ்செய்வார்கள்.

பம்பாயில் 21-ந் திகதி கவர்னர் ஜெனரலுக்கு வரவேற்புபசாரமும் இராப் போசனவிருந்தும் அளிக்கப்படும், 23-ந் திகதிதொடக்கம் 25-ந் திகதிவரை அவர் டில்லியில் தங்குவார். அவர் டில்லியில் மகாத்மா காந்தியின் சமாதிக்குச்சென்றுஅஞ்சலிசெலுத்துவார்.

நவம்பர் 1-ந் திகதி கவர்னர்ஜெனரல், மகாபலிபுரம் கலாக்ஷேத்திரா ஆகியஇடங்களைப் பார்வையிடுவார். பின்னர் நவம்பர்மாதம் 2-ந் திகதி தேசாதிபதி சென்னையிலிருந்து இலங்கை திரும்புவார்.

## சுக்கிரன் கிரகம்பற்றி அறிய முயற்சி

நியுயோர்க், ஒக் 16

சுக்கிரன் கிரகத்தின் மிக அருகில் இதுவரை எந்த செயற்கைக்கிரகமும் சென்றிராதஎல்லையைஅமெரிக்கா அனுப்பியுள்ள மெரினர் 5 என்றகிரகம் இந்த வாரத்தில் அடையும். ஆளில்லாத இந்த கிரகம் 21 கோடியே 20 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்தபின் சுக்கிரன் கிரகத்தின் அருகில் செல்லவிருக்கின்றது. இந்தக் கிரகத்திலுள்ள சாதனங்கள் சுக்கிரன் கிரகத்தை மூடியுள்ள மேகப்படலங்களை ஊடுருவி தகவல்கள் சேர்க்கக்கூடியவையாம். இந்தக் கிரகத்தின் மேல்பரப்பின் இயல்பு, தன்மைகள்பற்றி இக்கிரகம் தகவல்கள் சேகரிக்கவிருக்கின்றது.

## சங்கானை கொலை முயற்சி வழக்கு தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

சங்கானை கொலை முயற்சி வழக்கில் இரண்டாம் எதிரியான சின்னட்டியன் கணபதியை இரண்டு வருட நன்னடத்தையிலும், மூன்ரும் எதிரியான கணபதி ராஜேந்திரனை மூன்று வருட நனனடத்தையிலும் செல்லுமாறு நீதியரசர் திரு.வி.மாணிக்கவாசகர் நேற்று உத்தரவிட்டார்.

வடபகுதி அசைஸ் நீதி மன்றத்தில் நீதியரசர் திரு. வி. மாணிககவாசகர் முன்னிலையில் நடைபெற்ற இவ் வழக்கில் சங்கானையைச் சேர்ந்த கந்தன் பாலன்என்பவரைக்கொலைசெய்யஎத்தனித்ததாகவும்,படுகாயப்படுத்தியதாகவும்மூவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. முதலாம் எதிரியை ஏற்கனவே நீதியரசர் சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்திருந்தார்.

இரண்டாம் மூன்ரும் எதிரிகளை தலா 500ரூபா பிணையில் செல்ல அனுமதித்தபின்னரே நன்னடத்தையில் செல்லுமாறு நீதியரசர் உத்தரவிட்டார். நேற்றுடன் வடபகுதி அசைஸ் நீதிமன்ற பருவகாலவிசாரணை முடிவடைந்தது. [ந. நி.]

## பர்மிய பிரஜைகள் மீது கண்காணிப்பு

கொழும்பு, திங்கள்

கொழும்பிலுள்ள பர்மிய தூதரகத்திலிருந்து எந்த பர்மிய பிரஜையும் வெளியேருதபடிஇலங்கைஅரசாங்கம் கண்காணித்து வருகின்றது. இலங்கையிலிருந்து பர்மியர் எவரும் வெளியேறுவது குறித்தும் அரசாங்கம் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

இலங்கையிலுள்ள பர்மிய தூதர் திரு. பூன்வாட்டின் 35 வயது அழகிய மனைவியான திருமதி ஷேர்லி பூன்வாட் மரணமானதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கின்றது.

இதற்கிடையில் இந்த மரணம் குறித்து இலங்கை அரசாங்கம் பர்மிய அரசாங்கத்துக்கு தெரிவித்த தகவல்களுக்கு இன்னும் பதில் எதுவும் கிடைக்கவில்லை யென்று தெரிகின்றது. பர்மிய அரசாங்கத்தின் பதில் எந்த நிமிடத்திலும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இலங்கையிலுள்ள பர்மிய தூதர் இன்று நாட்டைவிட்டு வெளியேற முயற்சி எடுத்ததாகவும் அம்முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

திருமதி பூன்வா மரணம் குறித்து விசாரணை நடத்தி இரத்த பிரவாகத்தினுல் மரணம் என்று அறிவித்த டாக்டரை பொலிசார்விசாரித்திருக்கிருர்கள்.

திருமதி பூன்வாட்டின் மரணம் குறித்து முறைப்படி மரணவிசாரணை நடைபெறுமுன்னரே சடலம் தகனம் செய்யப்பட்டதில் மர்மம் பற்றி பொலிசார் துப்புதுலக்குவதாகவும் அறியப்படுகின்றது.

அரிசியை

## இந்தியா திருப்பித் தருகிறது

புதுடில்லி, ஒக். 16

இந்தியாவுக்கு தாய்லாந்திலிருந்து 10 ஆயிரம் டன் அரிசி ஏற்றிவரும் கப்பலை இந்திய அரசாங்கம் இலங்கைக்குச்செல்லுமாறு திருப்பியுள்ளது.

இந்தியாவுக்கு அண்மையில் இலங்கை அரசாங்கம் கொடுத்துதவிய அரிசிக்குப் பதிலாகவே இந்த நடவடிக்கை [illegible]

## 'ஷி'யின் கடமைகளை 'சூ' செய்கிருர்

ஹாங்காங், ஒக். 16

நவசீனுவின் அதிபர் திரு. லியுஷாஷியின் கடமைகளில் சிலவற்றை அந்நாட்டின் பிரதம மந்திரி திரு சூ-என்லாய் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டுள்ளதாக இங்கு தகவல்கள் கிடைத்திருக்குன்றது.

திரு. சூ-என்-லாய் பிற நாட்டு தலைவர்களுக்கு அழைப்புகள் விடுத்துவருவதாகவும் இம்மாதிரியான அழைப்புகள் சாதாரணமாக ஒரு நாட்டின் அதிபரினுலேயே விடுக்கப்படுமென்றும் கருத்துத்தெரிவிக்கப்படுகின்றது.

திரு. ஷி தமது கடமைகளைச்செய்யவொட்டாமல் தடுக்கப்பட்டுவருவதாகவும் செய்திகள்கிடைத்துள்ளன.

## இலங்கை இந்திய கப்பற் சேவை

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கப்பல் போக்குவரத்து சேவை அடுத்தமாதம் முற்பகுதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு நடைபெறமாட்டாது. இந்த இரண்டுமாதங்களிலும இலங்கைக்கு இந்தியாவுக்கு மிடையிலுள்ள கடல் பிராந்தியத்தில காலநிலை மோசமாக இருப்பதே கப்பல் சேவை தடைப்படுவதற்கு காரணமாகும். இச்சேவை ஜனவரி மாதத்தில் மீண்டும் ஆரம்பமாகும்.

இந்தியாவுக்கு ரயில்மூலம் செல்வதற்கும், இந்தியாவிலிருந்து வருவதற்குமான ஏற்பாடுகளும் இரதஇரண்டு மாதங்களில் நடைபெறமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பஸ்:

நல்ல நிலைமையிலுள்ள CV 4000 தொடர்பு இலக்கமுள்ள 25 பிரயாணிகள் ஏற்றிச் செல்லக்கூடிய பஸ் விற்பனைக்குண்டு. நாகவிகாரைக்கு முன் பஸ்ஸை பார்வையிடலாம். விபரங்களுக்கு P. K. வேலப்பகுட்டி, ஜீவா பாங்கிள் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, [சுபாஸ்கபேக்குமுன்], யாழ்ப்பாணம். 2258

## வாடகைக்கு

ஹோட்டல்:

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி பஜாருக்குள் நல்ல நிலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஹோட்டல் வாடகைக்கு உண்டு. ஹோட்டல் அல்லாமல் வேறு வியாபாரத்துக்கும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும். பாலன், 53, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2257

கார்

எண்ணுயிரம் தொடர்பு உடைய சி. என். A/40 கார் நல்லநிலமையில் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். யெப்னுமோட்டோர்ஸ், 91, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2253

## காணவில்லை

கூப்பன்கள்:

P 887106 - I 500718 இலக்க கூப்பன்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் அல்லது சி. ஆ. இளையதம்பி, குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்ற விலாசத்தில் தயவு செய்து சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2557

## WANTED

Representatives

Wanted Representatives either sex, full or part-time, to operate our activities in all districts. Training provided. Retired persons also considered. Attractive remuneration. Written applications only to: Mahaluckshumi Agencies, Finance and Sales Company, 15/22, power house Road, Jaffna. 2254

## தேவை

வெல்டர்:

மின்சாரமூலம் வெல்டிங் செய்வதற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த ஒருவர் தேவை. விபரங்களுக்கு விளம்பர இல. 2260 G/o 'ஈழநாடு' என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 2260

## புதிய செயலாளர்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு சனசமூக முன்னேற்றச்சங்கச் செயலாளரான திரு. சு. கணபதிப்பிள்ளைமொழிவழித்தொழிற் சங்கங்களில் ஒன்முன அரசாங்க கூட்டு ஸ்தாபன ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
சிவாஜி - கே.ஆர். விஜயா
நடித்த
தங்கை


# விளம்பரம்

## தேவை

நிர்வாகஸ்தர்:

கட்டுப்பண முறையில் தளபாடங்களை விநியோகம் செய்வதற்கு கீழ்க் காணும் பட்டணங்களில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் எமது கிளை ஸ்தாபனங்களுக்கு நிர்வாகஸ்தர்கள் தேவை. ரொக்கப்பிணை ரூபா 2,000/- ஆதனப் பிணை ரூபா 3,000/- செலுத்தக் கூடியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். குறிப்பிட்ட பட்டணங்களில் நிரந்தரமாக வசிப்பவர் விரும்பத் தக்கது. ரொக்கப்பணத்திற்கு வருடாந்தம் 10 வீத வட்டி கொடுக்கப்படும். வயது 25 — 30 இடைப்பட்டவர் விரும்பத்தக்கது. சம்பளம் மாதம் 150/- எல்லாம் உட்பட்ட விற்பனைக் கொமிஷன் 5 வீதம். கிளைகள் ஆரம்பிக்கப்படவிருக்கும் பட்டணங்கள்.

சுன்னுகம்
பருத்தித்துறை
சாவகச்சேரி
ஊர்காவற்றுறை

சேல்ஸ்மன்:

தளபாட விற்பனையில் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. சம்பளம் மாதம் ரூபா 100/- எல்லாம் உட்பட மூன்று மாதங்களின்பின் திறமை பார்த்து சம்பள உயர்வு வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 30-10-67-ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஜெனரல் மனேஜர், பாஷன் பேணிஷிங் பலெஸ், 7, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## தேவை

மெஷின் இயக்குனர்கள்:

மரக்கடைச்சல் தொழிலில் அனுபவம் வாய்ந்த மெஷின் இயக்குனர்கள் தேவை. அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். J. S. C. அல்லது மேற்பட்ட தராதரப் பத்திரமுடைய மரவேலைப் பாடத்தில் சித்தியடைந்தோருக்கு முதலிடம் கொடுக்கப்படும். அனுபவம் அற்றவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாத சம்பளம் 60/- பயிற்சியின் பின் ரூபா 90/ எல்லாம் உட்பட.

சித்திர வேலையாள்:

ஸ்பிறே, கைவேலை செய்வதற்கு சித்திர வேலையாட்கள் தேவை. S. S. C. பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி எய்தியவர்களாக இருத்தல் வேண்டும். மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதச் சம்பளம் ரூபா 60/- பயிற்சியின் பின் ரூபா 90/- எல்லாம் உட்பட.

விண்ணப்பங்களை 30-10-67-ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக ஜெனரல் மனேஜர், பாஷன் ரோய் இன்டஸ்றீஸ், 5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## மலேரியாவும் வேலைநிறுத்தமும்

கொழும்பு திங்.

மலேரியா தடுப்பு இயக்க ஊழியர்கள் தங்கள் குறைகள் நிவிர்த்தி செய்யப்படாவிட்டால் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளனர். வரண்ட பிரதேசங்களில் இவ்வருடம் மலேரியா கூடுதலாகப்பரவியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.


மனோகரா
யாழ்ப்பாணம்
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
ஆடிப்பெருக்கு

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Tanette Scoll & Ronald Levis
in
Colompias
Siege of the Saxons
In Color

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
நடித்த
நாம் மூவர்


# உத்தர பிரதேச அரசியல் நிலைமை

லக்னோ, ஒக். 16

உத்தரப் பிரதேசஆளும் கட்சியான ஐக்கியமுன்னணி அதன் அங்கத்துவக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சிகளின் ராஜினமாவையிட்டு ஏற்பட்டுள்ள நிலைமையை இன்று ஓர் இணைப்புக் கூட்டத்தில் ஆராயவிருக்கிறது.

இவ் விஷயம் பற்றி, உத்தரப் பிரதேச முதல் மந்திரி திரு. சாரன்சிங்கிடம் கேட்டபோது, கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சிகளின் ராஜினமா பற்றித்தாம் மற்றக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்க விருப்பதாக அவர் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச ஆளும் கட்சியான ஐக்கிய முன்னணியிலிருந்து, கம்யூனிஸ்ட் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த நான்கு மந்திரிகளும், மூன்று உதவி மந்திரிகளும் ராஜினமாச் செய்துள்ளனர்.



பவரின்
காய்கறிப் போரை
ஏ. பவர்



3-வது குதூகல வாரம்!

இங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணு [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனு - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிஷ்ருண பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



# உங்கள் வரவேற்பு அறையில் அழகு



காட்சிக்குவைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தனித்த கூட்டான தளபாட வகையருக்களில் இந்த செற் ஒன்ருகும். றெக்ஸீன் மெத்தை தைக்கப்பெற்ற இந்த வரவேற்பறைத் தளபாட செற் எந்த வீட்டுக்கும் சோபையளிக்கும். 6 தளபாடங்களுமாக ரூ.275/-

எமதுமற்றெரு சிறப்புப் பொருள்! கண்ணறை ரப்பர்மெத்தைபொருத்திய தளபாடம் தரச்சிறப்புவாய்ந்த வெட்டு மரத்தால் உருவாக்கப்பட்டவை. வழமைவிலையின் பாதிவிலைக்கு கொடுக்கப்படுகின்றன.

இன்றே வருக.

இவ்வித சகாய விலையில் சில குறிப்பிட்ட தளபாடங்களே உள.

எம். எஸ். பர்னுந்து அன்ட் கம்பனி

110, மெயின் வீதி மொரட்டுவ.

கிளைகள்: இல. 1, 317, பெரியமுல்லை, நீர்கொழும்பு. இல. 32 கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் போரை எதிர்த்து அமெரிக்க பெண் தீக்குளிப்பு

லொஸ் அஞ்செல்ஸ், ஒக். 16

அமெரிக்காவிலுள்ள லொஸ் அஞ்செல்ஸ் நகரில், ஒரு பெண்மணி, தனக்குத் தானே தீமூட்டித் தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

அவர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டது, வியட்னும் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே எனத் தெரிகிறது.

இப் பெண் தமது உடல் மீது பெட்ரோல் ஊற்றி, அதற்கு நெருப்பு வைத்துக் கொண்டார்.

## அமெரிக்கரை எதிர்த்து துருக்கி மாணவர் ஆர்ப்பாட்டம்

அங்காரா, ஒக். 16

துருக்கியில், வியட்னும் போரில் அமெரிக்காவின் பங்கை எதிர்த்து, துருக்கி மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளனர்.

நேற்று, அமெரிக்க 7-வது கடற்படை, இஸ்மீர் துறைமுகத்துக்கருகில் வந்து சேர்ந்தபோது, மாணவர்கள் இவ்வித ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

துறைமுகத்துக் கருகாமையில் அமைந்துள்ள அமெரிக்க விமானத்தளமொன்றையும் மாணவர்கள் நாசப்படுத்தினர்.

## அல்பேனியா தாக்கப்படின் சீனு உதவிக்கு விரையும்

பீகிங், ஒக். 16

அமெரிக்கா, ரஷ்யா அல்லதுவேறெந்தப் பிற்போக்கு நாடாவது அல்பேனியாவைத் தாக்கினுல், அல்பேனியாவின் உதவிக்குச் சீனு வருமெனச் சீனு, அல்பேனியாவுக்கு உறுதியளித்துள்ளது.

பீகிங்கில் வெளியிடப்பட்ட சீன, அல்பேனிய இணைப்பறிக்கையொன்றில், சீனு இவ்விதம் உறுதியளித்துள்ளதாகப் புதுசீனச் செய்தித்தாபனம் தெரிவிக்கிறது.

## இந்தி எதிர்ப்பைக் கைவிடுமாறு தமிழக மாணவர்க்கு கோரிக்கை

### தி. மு. க. பொதுச்சபை விடுத்தது

சென்னை, ஒக். 16

சென்னையில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்சபை, இந்தி எதிர்ப்புப் பிரசாரத்தைக் கைவிடுமாறு தமிழக மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

பிராந்திய மொழிகளுக்கு உரிய இடம் அளிப்பதெனவும், ஆங்கிலத்தை நீடிப்பதெனவும் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

### நிராகரிப்பு

மொழிப் பிரச்னையில், மத்திய அரசின் கொள்கை நிலையை பொதுச்சபை நிராகரித்ததுடன், ராஜ்ய அரசாங்கத்தின் கொள்கைக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ராஜ்ய அரசாங்கத்தின் தேசியமயக் கொள்கையையும் பொதுச் சபை ஆதரித்தது.

### சேலம் எஃகாலை

சேலம் எஃகு ஆலையைப் பொறுப்பேற்குமாறு மத்திய அரசைப் பொதுச் சபை கேட்டுக் கொண்டது.

## புயல் நிவாரணம்

புனேஷ்வர், ஒக். 16

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில், புயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்குஉணவு தானியம், மருத்துவ உதவிகள் ஆகியன விரைந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

## புதிய இலக்குகள்மீது அமெரிக்கவிமான தாக்குதல்

சைகோன், ஒக். 16

வடவியட்னுமில் புதிய இலக்குகள் மீது அமெரிக்க விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

# பீஹாரில் கலவரம்

## 5 பேர் மரணம்; 30 பேருக்கு காயம்

பட்ணு, ஒக். 16

பீஹார் ராஜ்யத்தில், மிஸாப்பூர் மாவட்டத்திற்கருகே நடைபெற்ற ஒரு கலவரத்தில், பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது, 2 பேர் கொல்லப்பட்டனர். ஒரு பொலிஸ் காரர் உட்பட 30 பேருக்குக்காயங்கள் ஏற்பட்டன.

வன்முறைக்கும்பலொன்று, நேற்றுப் பல பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டபோது, மூவர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்தே, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டி ஏற்பட்டது.

நிலைமைஇப்போது கட்டுக்கடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## துங்குவுக்கு இந்திய ரோஜா!

கோலாலம்பூர், ஒக். 19

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயினிடமிருந்து, 30 வகை ரோஜாச் செடிகள், மலேஷியாப் பிரதமர் திரு. துங்கு அப்துல்ரஹ்மானுக்குக் கிடைத்துள்ளன.

கடந்த வாரம் இந்தியாவிலிருந்து விமான மூலம் இங்கு வந்து சேர்ந்த இந்த ரோஜாச் செடிகள், இரு தினங்களுக்கு முன்னர், இங்குள்ள இந்திய தூதுவரால, மலேஷியப் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வருடம் முற்பகுதியில், மலேஷியாவுக்கு விஜயம் செய்திருந்த போது திரு. துங்குவுக்கு ரோஜாச் செடிகள் அனுப்புவதாக டாக்டர் ஹுசெயின் உறுதியளித்திருந்தாராம்.

## நாஸருக்கெதிரான இராணுவச்சதி

கெயிரோ, ஒக். 16

கடந்த ஒகஸ்ட் மாதம், ஐ. அ. கு. ஜனுதிபதி நாஸரின் ஆட்சியைக் கவிழ்க்க, முன்னுள் இராணுவத்தளபதி அமீர் தலைமையில் நடைபெற்ற இராணுவப்புரட்சிச் சதித் திட்டத்தில் பங்குபற்றியதாகச் சந்தேகிக்கப்பட்டுள்ள இராணுவத் தலைவர்களை விசாரிக்க விசேஷ இராணுவ விசாரணை மன்றமொன்று கெயிரோவில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்பும் வெள்ளையும்!

கேப்டவுன், ஒக். 16

தென்னுபிரிக்காவில், ஒரு வெள்ளைப் பெண்ணின் உயிர், ஒரு கறுப்பரின் நுரையீரலினுல் காப்பாற்றப்பட்டுள்ளது.

ஒருகார் விபத்தில்சிக்கி உயிரிழந்த கறுப்பரின் நுரையீரல், இந்த வெள்ளைப் பெண்மணிக்குப் பொருத்தப்பட்டது.

இந்த நுரையீரல் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டதன் பயனுக, வெள்ளைப் பெண்ணின் உயிர் காக்கப்பட்டது.

## காங்கிரசல்லாத ராஜ்ய ஒத்துழைப்பு

ஜலந்தர், ஒக். 16

உணவு விஷயத்தில், காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்கள் சிறந்த ஒத்துழைப்பு அளிப்பதாக இந்திய மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜீவன் ராம், இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சிறு சிறு தொந்தரவுகள் ஏற்படினும் சிலர் அமைதி குலைந்து ஆத்திரப் படுகின்றார்கள். ஆனால் மனம் பரிசுத்தமடைந்து கட்டுப்படுத்தப் படின் எந்த நிலைமையையும் எதிர் நின்று அமைதியாக சமாளிக்கலாம். மனதை சுத்தப்படுத்தி கட்டுப்படுத்த சுலபமான வழி, இறைவன் பெயரை சதா உச்சரிப்பதுதான்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு புரட்டாதி 31உ 17-10-67

## நாஸர் மனமாற்றம்?

மேற்கு ஆசியா நெருக்கடி விஷயமாக இஸ்ரேலுடன் ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் நாஸர் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக லண்டன் செய்தியொன்று கூறுகிறது. இது உண்மையாயின் பெரிதும் வரவேற்கத் தக்கதுடன் இந்தப் பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு சீக்கிரம் ஏற்பட உதவியாக இருக்கும்.

இஸ்ரேல் புதிதாக ஆக்கிரமித்துள்ள சினாய் பகுதியிலிருந்து தங்கள் துருப்புகளை வாபஸ் வாங்காதவரை, அவர்களுடன் பேசத் தாங்கள் தயாரில்லை என்று இதுவரை ஐ. அ. குடியரசு கூறி வந்தது. இஸ்ரேலோ இதற்கு உடன் படவில்லை. தங்களுடன் ஐ. அ. குடியரசு நேரில் பேச வேண்டுமென்று கேட்டு வந்தது. இதனால் முட்டுக்கட்டை ஏற்பட்டு திடீர் திடீரென பலாத்கார சம்பவங்கள் நடந்து, மீண்டும் யுத்தம் கிளம்பக் கூடிய ஆபத்து இருந்து வருகிறது. சூயஸ் கால்வாய் மூடப்பட்டு, ஐ.அ. குடியரசுக்கு மட்டுமன்றி இலங்கை உள்ளிட்டு பல ஆசிய நாடுகளுக்கும் பலபல சங்கடங்கள்.

இரு தரப்பினரும் பிடிவாதம் காட்டினால் நிலைமை சீராவதற்கு வழி ஏது? ஜெனரல் நாஸரின் மனமாற்றம் உண்மையாயின் இதற்காக அவரையும் அவருக்கு யோசனை கூறியவர்களையும் பாராட்ட வேண்டும். யுத்தத்தால் எந்தப்பிரச்னையையும் தீர்க்க முடியாது. சமாதான முறையில் நல்லெண்ணத்துடன் பேசுவதாயின் எந்த சிக்கலானபிரச்னையையும் தீர்க்க முடியும். இம்மன மாற்றத்தால் ஐ. அ. குடியரசின் தேசீய மானத்துக்குப் பாதகமேற்படாது. இதற்கு பதில் உலக நாடுகளின் அனுதாபமும் ஆதரவும் இனி அதற்கு அதிகமாகக் கிடைப்பதாக இருக்கும்.

இஸ்ரேல் ஏதோ ஒரு நரித்தந்திரத்தால் ஆறு நாள் யுத்தத்தில் வெல்ல முடிந்திருக்கலாம். இந்த வெற்றியால் வெறி பிடித்துத்தாங்கள்பிடித்ததை விட முடியாதென்றும், அரபுகளை அவர்களது பூர்வீக இடங்களிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் கேட்பது அநீதியாகும். ஜனநாயக நாகரீக உலகம் இதைச் சகிக்காது. சூயஸ் கால்வாயிலே தங்கள் கப்பல்களும் ஓட உரிமைவேண்டுமென்பதே அவர்களது பழைய கோரிக்கை. இதற்கு நாஸர் சம்மதித்தால், இஸ்ரேல் தாங்கள் ஆக்கிரமித்த இடங்களை விட்டுப் பழைய இடத்துக்கு துருப்புகளை வாபஸ் வாங்க மறுக்க முடியாது. மிகச் சின்ன நாடான இஸ்ரேல், அமைதியாக முன்னேற வேண்டுமெனில், அது அண்டை நாடுகளுடன் தனது பிணக்கைத் தீர்த்துக்கொண்டு அவற்றின் அபிமானத்தையும் பெறுவதன் மூலமே முடியும். இது அறிவாளிகளான இஸ்ரேலியருக்குத் தெரிந்தே இருக்கவேண்டும்.

# புதிய தடையால் நோயாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் காலையிலும் மாலையிலும் சாப்பாடு விற்பனை செய்பவர்களுக்கு, ஆஸ்பத்திரி அதிகாரிகள் விதித்துள்ள புதிய தடை இங்குள்ளநோயாளிகளுக்கு பெரும்கஷ்டத்தை உண்டுபண்ணியுள்ளது.

இது வரைகாலமும்வார்ட்டுகளில் சாப்பாடுகளை வியாபாரிகள் கொண்டு சென்று விற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது ஆனால் கடந்தவாரம் முதல் இதனை ஆஸ்பத்திரி நிர்வாகிகள் மறுத்து விட்டார்கள். இதனால் நேற்று முன்தினம் சாப்பாடு விற்பனை செய்ய வார்ட்டுக்குள் சென்ற நான்கு சிறுவர்கள் ஆஸ்பத்திரி அதிகாரியினால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து வார்ட்டில்கால், கைமுறிந்து நடக்கமுடியாது சிகிச்சை பெறும் பலநோயாளிகளும், வெளியேசென்று உணவு வாங்க முடியாதிருக்கும் பெண் நோயாளிகளும் மேல்மாடி வார்ட்டுகளில் இருக்கும் பல நோயாளர்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள் தூரத்திலுள்ள இவர்கள் உறவினர்களும் காலையில் இவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வராதிருப்பதால் இந்த நோயாளர்கள் காலையில் சாப்பாடு எதுவுமின்றி பட்டினியே இருக்கவேண்டியுள்ளது இதுசம்பந்தமாகப் பலர் மேலிடத்துக்குப் புகார் செய்துள்ளதாகவும் தெரிகின்றது. [ந. நி)

# புதிய விவசாய கடன் திட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

புதிய விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் இதுவரை 4 கோடி 7 லட்சம் ரூபா யாழ்மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்மாவட்ட விவசாயிகளின் குறைகள் சம்பந்தமாக கடந்தவார இறுதியில் உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டாவை, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர். திரு. வேர்ணன் அபயசேகரா சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினர்.

உப உணவுப் பொருட்களுக்கான நாற்றுக்குத் தேவையான கன்றுகள் விதைகளை வாங்கவும் இப்புதிய கடன் திட்டத்தின் கீழ் பணத்தை விவசாயிகளுக்கு விநியோகிக்க உணவு விவசாய அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் உணவு உற்பத்தி இலாகாவைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் ஆகியவற்றை விளைவிப்பதற்கு தேவையான விதைகளை விவசாய இலாகா மூலமே விவசாயிகளுக்கு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது ஆனால் சின்னவெங்காயம், செத்தல்மிளகாய் ஆகியவற்றுக்கான விதைப் பொருட்களையும், கன்றுகளையும், வாங்குவதற்குத் தேவையான பணத்தையும் வங்கிகள் மூலம் புதிய விவசாயக்கடன் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பெற அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிகின்றது.

விரைவில் இலங்கை இறக்குமதி செய்யவிருக்கும் 7 லட்சம் மண்வெட்டிகளில் போதிய மண்வெட்டிகளை இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அரசாங்க அதிபர்திரு. வேர்ணன் அபயசேகரா, உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி பண்டாவுக்கு எடுத்துக் கூறியதாகவும்தெரிகின்றது

புதிய விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் சிறு மாற்றங்களை அண்மையில் விவசாயஅமைச்சுசெய்துள்ளது. இதுபற்றிய பூரணவிபரங்களை, காணிஅதிகாரிகளிடம் காரியாதிகாரி அலுவலகங்களில் விவசாயிகள் அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி]

### சமூகசேவைப் பகுதியின் தீபாவளிப் பரிசு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள அங்கவீனர்களுக்கு தீபாவளிப்பரிசாக துணிகளும், உடுப்புக்களும் இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் சமூகசேவைப் பகுதி டைரக்டர் திரு. எஸ். சிவசிதம்பரம் துரிதநடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

திரு. சிவசிதம்பரம் யாழ்ப்பாணத்தில் தர்மசிந்தை உள்ள பிரபல ஜவுளிக்கடைக்காரர்களிடமிருந்து துணிகளை இலவசமாகப் பெற்று பண்ணை அங்கவீனர்களுக்கு வழங்க ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார். தர்மசிந்தையுள்ள ஜவுளிக்கடைக்காரர்கள் சற்றுப்பழுதடைந்த துணிகளாயினும் சரி நாட்பட்ட துணிகளானாலும் இவ்ஏழைமக்களுக்கு வழங்க முன்வரவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (விநி)

## வருட இறுதியில் செயல்படுமாம்

உடுப்பிட்டி, திங்.

உடுப்பிட்டி வல்லைவெளியில் சுமார் 1 லட்சம் ரூபா செலவில் உருவாகிவரும் கூட்டுறவு வைத்தியசாலை இவ்வருட இறுதியில் செயல்படுமென அறியப்படுகிறது.

## இன்றைய பலன்

17-10-67

செவ்வாய்க்கிழமை

(புரட்டாதி மாதம் 31 உ)

நட்சத்திரம்- உத்தரட்டாதி பகல் 11-53 மேல் ரேவதி

திதி- சதுர்த்தி பிற்பகல் 1-40 மேல் பூரணை

சுபநேரம்- 10-32 — 12-02.

ராகுகாலம்- 3-02 — 4-32

மேஷம்- உத்தியோக விருத்தி, ஊக்க மிகுதி.

ரிஷபம்- காதல் களத்தில் மோதலைத் தவிர்

மிதுனம்- பெற்றூர் உதவி, பெருமையும் சேரும.

கடகம்- நல்லவர் வரவு, நகைச்சுவையுண்டு.

சிம்மம்- இளமை நினைவுகள், ஏக்கத்தின் சாயல்.

கன்னி- சதிபதி மகிழ்ச்சி, வெகுமதியுண்டு.

துலாம்- வாகன கஷ்டம், வரவு தடைப்படும்.

விருச்சிகம்- உற்றூர் வருகை, உவகை மிகுதி.

தனுசு- தடுமாற்றம் வேண்டாம், தன்தொழில் விருத்தி.

மகரம்- தியாக உள்ளம். திறமையும் சேரும்.

கும்பம்- பகைவர் சண்டை, பார்த்து நட.

மீனம்- ஊக்கமின்மை, உயர்வில் தாமதம்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## 'குளம்' நிரவப்பட்டது

உடுப்பிட்டி, திங்கள்

சுமார் 20 அடி நீளமும் ஒன்றரை அடி ஆழமும் கொண்ட ஒரு சிறு குளம் போல் மழை காலங்களில் காட்சியளிக்கும். நெல்லியடி பஸ் நிலையம், பொது மக்களின் பலத்த புகார்களைத் தொடர்ந்து பொதுமராமத்துப் பகுதியினரால் சமப்படுத்தப்பட்டுத் தார் போடப்பட்டுள்ளது. இது வரைகாலமும் இப் பஸ் நிலையம் மடும் பள்ளமுமாய் இருந்ததினால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும். இவ் வெள்ளத்திலேயே பஸ்களும் நிறுத்தப் பட்டுவந்ததினால் பிரயாணிகள் வெள்ளத்தில் இறங்கித் தமது ஆடைகளை நனைத்தபடியே பஸ்களில் ஏறி வந்தனர். பிரயாணிகளும், பொது மக்களும் இப் பஸ் நிலையத்தில் காணப்பட்ட வசதியீனங்களை மேலதிகாரிகளுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து உடனடியாக பொது மராமத்துப் பகுதியினர் மழையையும் பொருட் படுத்தாது திருத்த வேலைகளை மேற் கொண்டுள்ளனர்.

### கயரோகநிவாரண உதவி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம் செவ்வாய்

சமூக சேவை அதிபரின் 1964-65-ம் ஆண்டிற்கான பரிபாலனஅறிக்கையின் படி 14,545 பேருக்கு கயரோக நிவாரண பண உதவி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் யாழ்ப்பாணத்தில் 1368 பேரும், மன்னரில் 69 பேரும், மட்டக்களப்பு- திருகோணமலை ஆகிய இடங்களில் முறையே 485, 301 பேரும் பணஉதவி பெற்றுள்ளனர்.

## நாட்டிலும் நகரிலும்

'மினிஸ்கேர்ட்' என்ற அரைப்பாவாடை மத குருமாரையும் மா மன்னர்களையும், பேராசிரியர்களையும் பெரும் வைதீகர்களையும் ஒரு கலக்கு கலக்கி விட்டது. பெண்ணினத்தின் மாண்பைப் பேணும் பெரியவர்கள் அதைப் பார்த்துவிட்டு குய்யோ முறையோ என்று கூக்குரலிடுகிருர்கள். நாகரீகத்தின் முன்னேற்ற வெள்ளத்துக்கு அணைபோட முடியாது, நடப்பது நடக்கட்டும்என்று வாளாவிருக்கிருர்கள் முன்னேற்ற வாதிகள். அதை முழுக்க முழுக்க வரவேற்கும் வாலிபர்கள் முன்னேற்றம் இன்னும்போதாது என்று பிரலாபிக்கிருர்கள்.

விக்டோரியா மகாராணியார் காலத்தில் ஆங்கிலப் பெண்மணிகள் கால் பெருவிரல் தெரியாமல் ஆடை அணிந்தார்கள். இன்று அவர்களுடைய பாவாடை ஓரம் இரண்டடிக்கு மேல் உயர்ந்து விட்டது, இதை நாகரீகம் என்று சொல்வதா அநாகரீகம் என்று சொல்வதா? இது தான் பிரச்னை.

இலங்கையில் பௌத்த காங்கிரஸ் அரைப்பாவாடையை எதிர்த்து போர்ச் சங்கு முழங்கியது. நாட்டு இளம் காளைகளின் மனதை அரைப்பாவாடையும் கால் பாவாடையும் கெடுக்கின்றது என்று அது கூவியது.

இலங்கை சர்வகலாசாலையிலுள்ள பௌத்த தத்துவ பேராசிரியர் டாக்டர் கருணரத்ன இதற்கு மாருன ஒரு பல்லவியை பாடுகிருர். 'மினிஸ்கேர்ட்' ஓர் அருமையான சாமான். நான் அதை விரும்புகிறேன். பௌத்த காங்கிரஸல்ல, எந்த சக்கரவர்த்தியும்அதைதடைசெய்யமுடியாது என்று பேராசிரியர் கருணரத்ன கூறியிருக்கிருர்.

அராபிய நாடுகளில் இந்த அரைப்பாவாடை பல விபரீதமான சம்பவங்களை உண்டு பண்ணியிருக்கிறது, அராபிய பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால்வரை 'பர்தா' அணியும் வழக்கமுள்ளவர்கள். இவர்களைக் கண்டு கண்டு பழக்கப்பட்ட அராபிய வாலிபர்கள், ஒருநாள் அரைப்பாவாடை அணிந்த சில யுவதிகளைக் கண்டதும் ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு, நினைவுதடுமாறி, தகாதனவெல்லாம் செய்ய நினைத்தார்களாம்.

இச்சம்பவங்களைக் கண்டோ என்னவோ, சவுதி அரேபியாதேசத்து மன்னர் பைசால் அரைப்பாவாடைகளை 'பைசல்' செய்யும்படி கடும்உத்தரவிட்டிருக்கிருர். மறைக்க வேண்டிய கவர்ச்சிநிலையங்களை மறைத்தே வைத்திருக்கவேண்டும் என்றும், அரை, கால், பாவாடைகள் தமதுபுராதன நாட்டின் பரம்பரையான பழக்க வழக்கங்களை மீறுகிறதென்றும் கூறி, சவுதி அரேபியாவில் வசிக்கும் ஆங்கில அமெரிக்க பெண்மணிகளும் அவற்றை அணியப்படாதென்றும் அவர் கட்டளைபோட்டிருக்கிருர்.

பெண்களும் (ஏன் ஆண்களும் கூடத்தான்) தாங்கள் விரும்பிய உடைகளை அணியலாம். அதை யாராலும் தடுக்க முடியுமா? நமது தமிழ் சினிமாக்களில் காதலர்கள் ஒருவரை ஒருவர் தொட்டு நடிக்காத காலம் ஒன்று முன்பு இருந்தது. இன்று அவர்கள் முத்தமிடும் பருவமே வந்துவிட்டது. இனிமேல்என்னென்ன நடக்குமோ, யார் அறிவார்?

அரைப்பாவாடை விவகாரமும் இப்படித்தான்

[4-ம் கலம் பார்க்க

[5-ம் கலத் தொடர்ச்சி]

போலும். நாகரீகம் என்பது நம்மையறியாமலேயே முன்னேறும் ஒரு காரியம். அதுபோகிற போக்கை யாராவது தடுக்க முடியுமா?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரோல் ஆராய்ச்சியா மீன் ஆராய்ச்சியா ?

காங்கேசன்துறை, திங்.

வடபகுதியில் கடந்த பல மாதங்களாக பெற்ருேலியம் கூட்டுத்தாபனத்தாரால் நடத்தப்பட்டுவரும் பெட்ருேலியஆராய்ச்சி இப்பகுதி மீனவர்களைப் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நடத்திவரும் நிபுணர்கள் இப்பகுதிக் கடலில் தேவைக்கதிகமாக 'டைனமைட்'டை உபயோகிப்பதால் மீன்களெல்லாம் இறந்துபோவதாகவும் இதனுல் மீனவர்கள் கஷ்டமடையவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மயிலிட்டி, சேந்தான்குளப்பகுதி மீனவர்களின் தொழில்கள் இதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சர்வதேச பிரச்னைகள் பற்றி இந்திரா

சோபியா, ஒக். 16

இந்தியாவுக்கும் பல்கேரியாவுக்குமிடையேயான நட்புறவில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியுள்ளதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார். சோபியாவில் நடைபெற்ற ஒரு பத்திரிகை மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் பல்கேரியாவுக்குமிடையே உள்ள வர்த்தக, பொருளாதார உறவுகள் மேலும் வளர நடவடிக்கைகள்எடுக்கப்படவிருப்பதாக் அவர் மேலும் கூறினுர்.

தமது பல்கேரிய விஜயம் இரு நாடுகளுக்குமிடையே சுமுகமான உறவுகளை வளர்க்க உதவியுள்ளதாகத் தாம் நம்புவதாக அவர், பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

### வியட்னும்

வியட்னும் பற்றிக் குறிப்பிடுகையில், வடவியட்னும் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தவேண்டுமென்பதே இந்தியாவின் நிலையென்று திருமதி இந்திரா காந்தி கூறினுர்.

### மே. ஆசியா

மேற்காசியப் பிரச்னையை தீர்க்க, மற்றும் நாடுகளுடன் சேர்ந்து, இந்தியாவும் முயற்சி செய்துவருவதாக இந்தியப் பிரதமர் கூறினுர்.

### அணு ஆயுத பரவல் தடை

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் பற்றி திருமதி இந்திரா காந்தி குறிப்பிடுகையில், அணு ஆயுத உற்பத்தி செய்யாத நாடுகளுக்குப் பாதகமில்லாத முறையில், அந்த ஒப்பந்தம் அமையவேண்டும் என்பதே இந்தியாவின் ஆவலாகுமென்ருர்.

### பாகிஸதான்

பாகிஸ்தானுடன், தாஷ்கெண்ட் ஒப்பந்த அடிப்படையில், தனது நட்புறவை வளர்க்க இந்தியா விரும்புவதாக இந்திரா காந்தி கூறினுர். அண்மையில், இரு நாடுகளும் தமது தந்தித் தொடர்புகளைப் புதுப்பிக்கச் செய்துகொண்ட உடன்படிக்கை பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

### ருமேனியா செல்கிருர்

பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இன்று புக்காரெஸ்டுக்குச் செல்லவிருக்கிருர். அவர் ருமேனியாவில் மூன்று நாட்கள் விஜயம் செய்வார்

---

## தட்டுப்பாடு

காங்கேசன்துறை, திங்கள்

மயிலிட்டி, காங்கேசாதுறைப்பகுதியில் பால் உணவுக்கு பெரும் தட்டுப்டுபன் ஏற்பட்டுள்ளது.

## 'வீரமும் ஞானமும் இளைஞர் பெறவேண்டும்'

பொகந்தலாவ, திங்கள்

'இன்றைய சிறுவர்கள், நாளைய தலைவர்கள் எனவே அவர்கள் வீரம், செல்வம், ஞானம் என்பவற்றைத் தாராளமாகப் பெற்றுத் தரணியை ஆளும் தகுதி பெற்று வாழவேண்டும். ஆகவேஇவற்றைநமக்கொல்லாம் அளிக்க வேண்டும் என்று வேண்டியே, பராசக்திக்கு விழா எடுக்கின்ருேம்.

பொகவந்தலாவை சென் மேரிஸ் பாடசாலையில் நடைபெற்ற நாமகள் விழாவில் தலைமையாசிரியர் சி. வைரவப்பிள்ளை பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

---

## நியமனம்

புலோலி, திங்.

பருத்தித்துறைப் பகுதியில் காலியாயிருந்த காணி ஏல விற்பனைக் கமிஷனர் பதவிக்குப் பருத்தித்துறை பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதனை பருத்தித்துறை மேலதிக மாஜிஸ்டிரேட் திரு. வி. குமாரசாமி நியமித்துள்ளார்.

---

## ஒரு மாதமாக சேவையில்லை!

காங்கேசன்துறை, திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து பிறவுண் வீதியூடாக கோண்டாவில் செல்லும் பஸ் ஒரு மாதகாலமாக சேவையற்று இருப்பதால் இப் பகுதியில் உள்ள அரசாங்க ஊழியர்களும், பஸ் பிரயாணிகளும் அரை மைல் தூரம் நடந்து வந்து பஸ் எடுக்க வேண்டியுள்ளது.

கொக்குவிலிலுள்ளதொழில் நுட்பக் கல்லூரிக்காக முக்கியமாக ஆரம்பிக்கப்பட்ட இப் பஸ் சேவையால் கல்லூரி தொடங்கி 13 தினங்களாகியும் மாணவர்கள் பயன் பெற முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கியூபெக், தனிராஜ்ய பிரேரணை தோல்வி

கியூபெக், ஒக். 16

கனடாவின் பிரெஞ்சு மொழிபேசும் மாகாணமாகிய கியூபெக்கில், லிபரல் கட்சியின் மாநாட்டில், அக் கட்சியைச் சேர்ந்த முன்ளுள் மந்திரி ஒருவர், கியூபெக் தனி ராஜ்யமாக இயங்க வேண்டுமென்ற பிரேரணையைச் சமர்ப்பித்தார். ஆனுல், கட்சி அப் பிரேரணையை நிராகரித்துவிட்டது. இதைத் தொடர்ந்து, பிரேரணையைச் சமர்ப்பித்த மந்திரி கட்சியிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளார்.

## சர்வோதய கருத்தரங்கம்

கொழும்பு, திங்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கக் கொழும்பு கிளையின் ஆதரவில் பண்டாரநாயக்க மாவத்தையிலுள்ள கணபதி வித்தியாலயத்தில் சர்வோதய கருத்தரங்கம் ஆரம்பிக்கப்பட்டு வாரந்தோறும் போயா நாளுக்கு மறுநாள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

அடுத்த கருத்தரங்கம் வரும் வியாழக்கிழமை மாலை 6மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. அன்று காந்தி நூற்ருண்டு விழா கொண்டாடுவது பற்றி ஆலோசிக்கப்படவிருக்கிறது.

---

ஆர்ஜெண்டீனு

## 75,000 பேர் வீடிழந்தனர்

பியூனெஸ் ஏரெஸ், ஒக். 16

ஆர்ஜெண்டீனுத் தலைநகரான பியூனெஸ் ஏரெஸ்ஸைச் சுற்றி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு இப்போது தணிந்து விட்டது.

ஆனுல் வெள்ளத்தினுல் பலத்த உயிர், உடைமைச் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 75,000 பேர் வீடிழந்துள்ளனர். வெள்ளத்தில் அகப்பட்டுப் பலர் காணுமற் போய் விட்டனர்.

ஆர்ஜெண்டீனுவின் மிக மோசமான வெள்ளம் இது என வர்ணிக்கப்பட்டுள்ளது.

## செனட்டர் தெரிவுபற்றி எஸ். ஜே. வி. விளக்கம்

கொழும்பு, திங்கள்

நடைபெறவிருக்கும் செனட்டர்கள் தெரிவில் தமிழரசுக் கட்சி பங்குபற்ருதென்றும், 1956-ம் வருடத்தில் காலியாகும் ஸ்தானங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் போட்டியிடுமெனவும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நமது நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியின்போது தெரிவித்தார்.

திரு. செல்வநாயகம் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

1965-ம் ஆண்டு நடைபெற்ற செனட்தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் தான் எங்கள் அபேட்சகர்களைத் தெரிவு செய்தோம். ஆகையால் நாம்இம்முறை ஒருவரையும் நிறுத்தவில்லை. எங்கள் ஆதரவு இம்முறை ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் உண்டு.

---

## உதவி வைத்திய அதிகாரி நியமனம்

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றிய செல்வி மெனிற்ரு பேடினன்ட் நியமனம்பெற்றுள்ளார்.

## ஐ.அ.கு வுக்கு விசேஷ பிரிட்டிஷ் பிரதிநிதி

கெயிரோ, ஒக். 16

பிரிட்டனுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையே உறவுகளை வளர்க்கும் பொருட்டு, பிரிட்டன் ஒரு விசேஷ பிரதிநிதியைக் கெயிரோவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சென்ற வாரம், பிரிட்டிஷ் முன்ளுள் மந்திரியொருவரான திரு. டிங்கிங்புட் கெயிரோ வந்து, ஜனதிபதி நாஸருடன் பேசிவிட்டுச் சென்றதைத் தொடர்ந்து இப்போது இவ் விசேஷ பிரதிநிதி பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டுள்ளார்.

மேற்கு ஆசியப் போரைத் தொடர்ந்து, பிரிட்டனுக்கும் ஐ. அ. கு. வுக்குமிடையே உறவுகள் மோசமடைந்திருந்தன. இப்போது அவ்வுறவுகளைமீண்டும் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே, விசேஷ பிரதிநிதி ஒருவரை பிரிட்டன், ஐ. அ. கு. வுக்கு அனுப்பியுள்ளது.

கெயிரோ வந்து சேர்நதுள்ள இவ்விசேஷ பிரிட்டிஷ் தூதுவர், ஜனதிபதி நாஸர் உட்பட மற்றும் பல ஐ. அ. கு. தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.


## முக்கிய அறிவித்தல்

SHELL

ஷெல்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கமக்காரர்களின் வசதியை முன்னிட்டு, கீழ்காணும் ஸ்தாபனத்தை கூடுதலான புதிய பிரதான கையிருப்பாளர்களாக நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிருேம்:

**றேயல் டிஸ்பென்சரி,**
**இல. 270, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஷெல்விவசாய ரசாயனப்பொருட்கள் யாவற்றுடனும், "என்றெக்ஸ்"20, "பொஸ்றின்", "பிட்றின்", "சுமித்தியன்", ஷெல் களைப்புற் கொல்லி 'ஆர்', ஷெல் களைப்புற்கொல்லி "எம்" - 50, ஷெல் பீ.எச்.சி. 10% தூள் ஆதியனவும் இந்த ஸ்தாபனத்திடம் இப்பொழுது கிடைக்கும்.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப் பொருளை நினையுங்கள் ஷெல்லை நினையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை நூற்றாண்டு காலமாக திருத்தப்படாத 'குவாட்டர்ஸ்'

## காங்கேசன்துறை புகையிரத தொழிலாளர்படும் கஷ்டம்

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை புகையிரத நிலைய தொழிலாளர் குவாட்டர்சில் வாழும் தொழிலாளர் குடும்பங்கள் வெயிலாலும் வெள்ளத்தினாலும் மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர்.

1915-ம் ஆண்டு இலங்கையின் புகையிரத சேவை ஆரம்பித்த காலத்தில் பிரிட்டிஷாரால் கட்டப்பட்ட இந்த தொழிலாளர் குவாட்டர்சில் மழைநீர் கூரையால் வருவதால் அவர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

பதினைந்து அறைகளைக் கொண்ட இந்த குவாட்டர்ஸில் சுமார் நூறுபேர் வசித்து வருகின்றனர். தனியொருவர் வசிக்கத்தக்கதாகக் கட்டப்பட்ட இக் குவாட்டர்சில் சுமார் பத்துப் பேர் வசித்துவரவேண்டிய நிர்ப்பந்தநிலையிலிவர்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. தொழிலாளர்களுக்கென அமைக்கப்படிருக்கும் மலசல கூடமும் அவர்களது வீடுகளுக்குப் பின்புறமாக அமைந்துடன் அதுவும் உடைந்து அரைகுறையாகக் காட்சியளிக்கிறது. இந்த மலசலகூடங்களை இவர்கள் உபயோகிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது, எந்த ஓர் இலாகாவிலும் இல்லாத நிலை காங்கேசன்துறை புகையிரத நிலைய தொழிலாளர் குவாட்டர்சில் நிலவிவருவது இங்குள்ள தொழிலாளர் மத்தியில் பெரும் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது. இதுசம்பந்தமாகப் புகையிரத இலாகாவிற்கு புகார் தெரிவித்திருந்தும்ஒரு விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஊக்கம்

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்குப் பகுதியில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதில் கமக்காரர்கள் அதிக முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். முன்னூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் உருளைக்கிழங்கு தரும்படி விவசாய இலாகாவினரைக் கோரியுள்ளனர்.

வலிகாமம் மேற்கு விவசாயக் கந்தோர் அதிபர் விதைக் கிழங்குகளைப் பெற்றுக் கொடுப்பதில் அதிக சிரத்தை காட்டி வருவதாகத் தெரிய வருகிறது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 17-10-67**

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு — எஸ். பரம் தில்லைராசா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 உரைச்சித்திரம், 10-00 தேர்ந்தஇசை.

### முள்ளியவளை வெற்றி

முல்லைத்தீவு, திங்கள்

முள்ளியவளை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் முல்லைத்தீவு சந்திரன விளையாட்டுக் கழகத்தினருக்கு மிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முள்ளியவளைக் கோஷ்டியினர் இரண்டு கோல்களால் வெற்றி பெற்றனர். திரு. ஜி ஞானமாணிக்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

### புதிய அதிபர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுர ஐக்கிய சங்க வித்தியாசாலைக்கு புதிய தலைமையாசிரியராக திரு. சு. சண்முகரத்தினசர்மா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம் மாதம் 14-ம் திகதி தமது கடமையை ஏற்றுக் கொண்டார். திரு. சு. சண்முகரத்தின சர்மா முன்பு இப் பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றியவர்

### எதிரி விடுதலை

காலி, திங்கள்

விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பால் டின் விற்க மறுத்ததாக நாகமுத்து திருச்செல்வம் என்பவருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கு காலி மாஜிஸ்திரேட் திரு. எம். அபூபக்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலை செய்தார்.

பால் டின் வாங்கியவர் கடைக்காரருக்கு கொடுத்த ஐந்து ரூபா நோட்டு மாற்றுவதற்கு சில்லறை இல்லை என்ற காரணத்தாலேயே பால்டின் விற்க மறுத்ததாக எதிரி தரப்பில் வாதாடப்பட்டது.

சட்டத்தின் பிரகாரம் எதிரி வேண்டிய சில்லறை வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

### சிறுவர்சுகாதாரம்

மானிப்பாய், திங்கள்

சிறுபிள்ளைகளின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் ஒவ்வொரு வீட்டு வளவிலும் மலசல கூடம் அமைக்கப்படவேண்டுமென நவாலி கிராம முன்னேற்ற சங்க செயலாளரும் மானிப்பாய் கிராம சபை உறுப்பினருமான திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் நவாலியில் நடைபெற்ற சிறுவர் தினவிழாவில் கூறினார்.

### 'ஆலய வழிபாடு அவசியம்'

மல்லாவி, ஞாயிறு

ஆணவம் நீங்கி முத்தி இன்பம் பெற ஆலய வழிபாடு மிக அவசியம். இதை நமக்கு முன் வாழ்ந்த சமயப் பெரியார்கள் உணர்த்தி உள்ளனர்.''

இவ்வாறு வவுனிக் குளம் சிவாலய திருப்பணிச் சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டத்திற்கு சமூகம் அளித்துச் சிறப்புரை நிகழ்த்திய மாவட்டக் காணி அதிபர் திரு. செ. சிவஞானம் கூறினார். இக் கூட்டத்தில் திரு. மு. தம்பிமுத்து காரியாதிகாரி திரு. க. சோமசுந்தரம் துணுக்காய் கிராமசபைத்தலைவர், திரு. வி. பாலசுப்பிரமணியம் நீர்ப்பாசன அதிபர் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்

### ஹொங்கொங்கில் 2 பேர் மரணம்

ஹொங்கொங், ஒக். 16

ஹொங்கொங்கில், நேற்றிரவு மீண்டும்பயங்கரமான கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கவ்லூன் மாவட்டத்தில், ஒரு வெடிகுண்டு வெடித்ததன் விளைவாக, 2 பேர் உயிரிழந்தனர். மற்றும் ஒருவர், காயத்துக்குள்ளானார்.

**கண்ணீர்ப்புகை**

பொலிஸாருக்கும், இடதுசாரி ஆர்ப்பாட்டக் காரருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்ட போது, பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

பிரிட்டிஷ் துருப்புகள், நிலைமையைச் சமாளிக்க, ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.


இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் இவ ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர் ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

வெறும் துரையினால் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும், ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் பாவிப்பது ஆரோக்கியமான பழக்கம் இதனால் உறுதியான ஆரோக்கிய [illegible] பற்களை [illegible]

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

## விசாரணையின் முடிவு

உங்களுடைய 6-9-67-ம் திகதிய பத்திரிகையில் "நிலத்திற் கிடக்கும் கடிதங்கள்' என்னும் தலையங்கத்தைத் தாங்கிய செய்தி சம்பந்தமாக நான் அறியத் தருவது:

இச்செய்தியிலுள்ள விஷயம் சம்பந்தமாகப் பூரண விசாரணை நடாத்தினேன். விசாரணை நடத்தியதன் பிரகாரம், அச்செய்தியில் எவ்வித உண்மையுமிருப்பதாகத் தெரியவில்லை. கரவெட்டி தபாற்கந்தோரிலுள்ள தபாற்பெட்டியின் திறப்புக் காணாமற் போகவுமில்லை மூடப்படாமற் திறந்தநிலையில் இருக்கவுமில்லை, அதற்குட்போடப்பட்ட கடிதங்கள் நிலத்தில் சிந்திக் கிடக்கவுமில்லை என்பதை நான் நடத்திய விசாரணையின்மூலம அறிந்தேன்.

தா. தர்மலிங்கம்
[தபாற்துறைப் பகுதி அத்தியட்சகர்]
யாழ்ப்பாணம்.

## கோவில் உண்டியல் திருட்டு

புன்னாலைக்கட்டுவன், திங். ஊரெழுவிலுள்ள கோவிலொன்றில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் திருடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மானம்பூ நடந்த மறுதினமே இத்திருட்டு நடைபெற்றதாகத்தெரிகிறது.

## சமூக சேவைஅதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ். "பிறந்த தினங்களுக்கும் இறந்த தினங்களுக்கும் ஏழை மக்களுக்கும் உணவளிக்க முன்வரும் தர்மவான்கள் பண்ணையில் உள்ள அங்கவீனர்களுக்கும் உணவு கொடுக்க முன்வர வேண்டும்" என்றுயாழ்ப்பாணம் சமூகசேவைப் பகுதி அதிகாரி திரு. எஸ். திருச்செல்வம் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பண்ணை அங்கவீனர்களுக்கு உணவு அளிக்கமுன்வரும் தர்மவான்கள் இது பற்றிய விபரத்தை முன்கூட்டியே அறிவிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (வி. நி)

## 'பிரயாணிகள் பாதிக்கப்படுகின்றனர்'

யாழ்ப்பாணம், செவ்வாய் காரைநகர் பௌத்த மிஷன் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து பஸ் ஊழியர்களைத் தங்குவதற்கு வழி செய்யும்படி காரைநகர் பொதுநல சேவைச் சங்கம் யாழ்ப்பாணம் இ. போ. ச. பிரதேச முகாமையாளரைக் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கு மிடையேயான சேவையில் 15 பஸ்கள் ஈடுபடுத்தப்படுகின்றன வென்றும், அவை சில சமயங்களில் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதால் காரைநகர் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனரென்றும் மேற்படி சங்கக் காரியதரிசி திரு. எஸ். செல்லத்துரை, முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் மேலும கூறியுள்ளார்.

கண்டக்டர்களிடமிருந்து பணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு காரைநகரில் ஒரு முழுநேர காஷியர் நியமிக்கப்படல் வேண்டுமெனவும், காரைநகரிலிருந்தும் கச்சேரிக்கு காலையும் மாலையும் கடுகதி பஸ் சேவையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டு மெனவும் இதனால் அரசாங்க ஊழியர்களும், பாடசாலை மாணவர் பயனடைவரெனவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. [வி. நி.]

## பயிர் அழிவு தடுக்க நடவடிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள் சரவணைக் கிராமத்தில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு சரவணபயிர்ச் செய்கைக் குழு தீவிர முயற்சி எடுத்துவருகிறது. கிராம சேவையாளர் திரு. தளையசிங்கம் பயிர் அழிவு ஏற்படாதவாறு எல்லோரையும் ஒத்துழைப்புத்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தரம் உயர்வு

ஊர்காவற்றுறை, திங்கள் வேலணை அம்மன் கோவிலடி உபதபாற் கந்தோர், மண்கும்பான் உபதபாற் கந்தோர் இரண்டும் பீ தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

ஒரு தவணைக்கு

## 12 வயதுக்குமேற்பட்ட மாணவருக்கு ஐந்து நாள் வயல் வேலை

சங்கானை, திங்கள் பாடசாலை மாணவர்கள் களை பிடுங்கல், பாடசாலைத் தோட்டம் பற்றிய மாநாடு கடந்த 14-ந் திகதி வலி-மேற்கு காரியாதிகாரி கந்தோரில் காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

12 வயதுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள ஒரு தவணைக்கு 5 நாட்கள் களை பிடுங்கவேண்டும். இப்பகுதியில்காலபோகவேளாண்மை மாத்திரம் செய்யப்படுவதால் கடைசித் தவணையில் மாத்திரம் களை பிடுங்க வாய்ப்புண்டு. ஏனைய இரு தவணைகளிலும் மிளகாய் பறித்தல், வெங்காயம் கிண்டுதல் ஆகிய வேலைகளைச் செய்தல்வேண்டும்.

மேற்படி களை பிடுங்கும் மாணவர்களின்விபரங்களைத் தயாரிப்பதுடன் பாடசாலைக்கு அண்மையிலுள்ள வயல்களில் களை பிடுங்க ஒழுங்குகள் செய்தல்வேண்டும்.

அவ்வப் பகுதி கிராம சேவகர்கள் தயாரிக்கும் விபரங்கள் அவ்வப் பகுதி பயிர்ச் செய்கைக் குழுக்களின் சிபார் பெற்றிருத்தல் வேண்டும்.

இம்மாநாட்டில் கல்விப் பகுதி, கமத்தொழில்சேவை கமத் தொழில் இலாகா, கூட்டுறவு இலாகா ஆகியவற்றின் மேலதிகாரிகளும் பங்குபற்றினர்.

பாடசாலைப் பிள்ளைகள் களை பிடுங்கல் பற்றிய முழு விபரங்களை இம்மாதம்-18ம் திகதிக்கு முன்னதாக காரியாதிகாரிக்கு அனுப்பிவைக்கும்படி வலி-மேற்கு கிராம சேவகர்கள் கோரப்பட்டுள்ளனர்.

## ஓய்வுபெற்ற 5 தினங்களில் மறைவு

உடுப்பிட்டி, திங்கள் கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாசாலையில் தலைமை ஆசிரியையாகவிருந்து பிரியாவிடைபெற்றதிருமதி இரத்தினம் வெற்றிவேலு (வயது 60) ஐந்துநாட்களின்பின் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலமானார். இப்பாடசாலையில் 5 வருடம் துணையாசிரியையாகவும், திருநெல்வேலி சைவப் பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியையாகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

## காரியாலயம் இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்வாய் தற்பொழுது பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கருகாமையில் அமைந்திருக்கும் வடமராட்சிக் காரியாதிகாரி அலுவலகம் இன்றுடன் வேறிடத்திற்கு மாற்றப்படவிருக்கின்றது. பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நிறுவப்பட்டிருக்கும் புதிய கட்டிடத்திலேயே இன்று தொடக்கி வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோர் செயல்படும்.

## இ. போ. ச. வின் புதிய பஸ் சேவை

கொட்டாஞ்சேனை, திங். இலங்கை போக்குவரத்துச்சபை சென்ற வருடத்தில் 66 புதியபஸ்சேவைகளை ஆரம்பித்து நடத்தி வந்துள்ளது,

1965-ம் வருடத்தில் தினமும் சராசரியாகபிரயாணம் செய்த பிரயாணிகள் தொகை 5 லட்சத்து 15ஆயிரம். இத்தொகை 1966-ல் 5 லட்சத்து 85 ஆயிரமாக அதிகரித்தது.

## கோரிக்கைமீது நடவடிக்கை

கிளிநொச்சி, திங்கள் முரசுமோட்டையிலுள்ள முருகானந்த வித்தியாசாலையில் 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களை இடம் மாற்றுமாறும் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை அங்கு நியமிக்குமாறும் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளிநொச்சிக் கிளைக் காரியதரிசி திரு. எம். எஸ். கே. லட்சமணன் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. பெரோக்விடம் கோரியிருந்ததைத் தொடர்ந்து இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுமென வடபகுதி வித்தியாதிபதி ஆர். ஆர். நவரத்தினம் அறிவித்துள்ளார்.


ஸ்ரீலங்கா
சாகித்திய மண்டலம்
கவியரங்கு

அடுத்த கவியரங்கு இம்மாதம் 28ஆந் தேதிமாலை 5 மணி தொடக்கம் கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ரசிகர்கள் அன்போடழைக்கப்படுகின்றனர்.

அடுத்த கவியரங்குகளில் பாடல்களை அரங்கேற்ற விரும்புவோர் தனது கவிதைகளை இம்மாதம் முடிப்பிற்குள் அனுப்புமாறு வேண்டுகிறோம்.

பொதுச்செயலாளர்.

சாகித்திய மண்டலம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7.
294

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ரேக்*
நேரடிக் களை கொல்லி
உபயோகித்து
நெல் விளைவைப்
பெருக்குங்கள்



ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை பின் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.



நேரடிக் கொல்லியான
ரேக்கினையே உபயோகியுங்கள்.
நெல் விளைவு பெருகும்.

Monsanto
* மொன்சந்தோ கொம்பனியின் வர்த்தகக் குறி.
MC 2/67 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மலையக மக்களின் இதயங்களில் இருப்பவர்’

பம்பலப்பிட்டி, திங்கள்
‘மலையகமக்களின் இதயங்களில் இடம்பெற்றிருக்கும் வன்னியசிங்கம்இன்றிருந்திருந்தால் தமிழ்மக்களின்குறைகளை நன்குணர்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய ஆவன செய்திருப்பார். அமரர் வன்னியசிங்கம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்த மாவீரர்’ என அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம். சி. எம். கலீல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுவிழாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு மலர் ஒன்று மேற்படி விழாவில் கொல்லன்கலட்டி இளைஞர் மன்றத்தால் வெளியிடப்பட்டது.

# கொக்குவில் கிராமசபை மோசடி பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.
கொக்குவில் கிராமசபையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட ஊழல்களைத்தொடர்ந்து தனிநபர் விசாரணை நேற்று ஆரம்பமாயிற்று. உள்ளூராட்சி கமிஷனரின் உத்தரவின்பேரில் இந்த விசாரணையை திரு. ஜே. டபிள்யூ. சுபசிங்கா நடத்தினர்.

கொக்குவில் கிராமசபையில்நடைபெற்றதாகத்தெரிவிக்கப்பட்ட மோசடிகள் குறித்து ஏற்கனவே விசாரணை நடைபெற்றது. ஆடிட்டர் ஜெனரல் இலாகாவினுல் நடத்தப்பட்ட விசாரணைகளுக்குத் திருப்தியற்ற பதில் தெரிவிக்கப்பட்டதென மேற்படி கிராமசபையின் பல உறுப்பினர்களும், பொதுமக்கள் பலரும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவருக்கும், உள்ளூராட்சி அமைச்சருக்கும் புகார் செய்திருந்ததாகவும் இதனைத்தொடர்ந்தே இந்த விசாரணை நடத்தப்படுவதாகவும் தெரிகின்றது. யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற தனிநபர் விசாரணையில் கொக்குவில் கிராமசபைத்தலைவர் திரு. சி. அருளம்பலம்,கிராமசபைச் செயலாளர் திரு. குமாரசாமி, முன்னுள்கொக்குவில் கிராமசபை லிகிதர் திரு. மாசிலாமணி ஆகியோர் விசாரணைசெய்யப்பட்டதாகத் தெரிகின்றது. ஆடிட்டர் இலாகா சுப்பிரின்டன், ஆடிட்டர் இலாகா இன்ஸ்பெக்டர் உட்பட ஆடிட்டர் இலாகாவைச் சேர்ந்த நால்வர் விசாரணை செய்யப்படுவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்கள். விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும். [ந. நி.]

# பொலிவியாவில் இறந்தவர் கியூபா புரட்சிவாதி குவேராவே

## பிடெல்காஸ்ட்ரோ அறிவிப்பு

ஹவானு, ஒக். 16
பொலிவியாவில், கொரில்லாப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் கொல்லப்பாட்டதாக அறிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கியூபா புரட்சித் தலைவர் ஒருவரான ஏர்னெஸ்டோ ‘சி’ குவேராவின் மரணத்தை கியூபாப் பிரதமர் டாக்டர் பிடெல்காஸ்ரோ, நேற்று இங்கு பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

குவேராவின் மரணம் பற்றிய முன்னைய தகவல்கள் தெளிவாக அமைந்திருக்கவில்லையென்றும், ஆனுல் பொலிவியாவிலிருந்து பின்னர் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, இறந்தவர் குவேராவே என்பது நிச்சயமாகிவிட்டதாக டாக்டர் காஸ்ட்ரோ, நாடெங்கும் ஒலிபரப்பப்பட்ட டெலிவிஷன், ரேடியோ செய்தியொன்றில் அறிவித்தார்.

காலமான ‘சி’ குவேரா, கியூபாப்புரட்சி இயக்கத்தின் ‘மூளை’ என வர்ணிக்கப்பட்டவர். அவர், காஸ்ட்ரோவின் வலதுகரமாக விளங்கியவர்.

தென் அமெரிக்கக் குடியரசுகளில் கெர்ரில்லாப்போர் நடத்துவது என்ற கியூபா அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க, அவர் பொலிவியாவில் கொரில்லாப்போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்

## உரிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்.
கொழும்பு சேமிப்பு வங்கிக் கட்டுப்பாட்டதிகாரி இலாகாவினர் தமிழ்மூலம் எழுதிய கடிதத்திற்குச் சிங்களத்தில் பதில் அனுப்பியதற்கு உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்வதாக மேற்படி இலாகா சிங்கள மூலம் பதில் பெற்றவருக்குத் தெரிவித்துள்ளது. கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மூலம் சிங்களக் கடிதம் பெற்றவர் செய்த முறைப் பாட்டினைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## கல்லூரியில் விழா

கொத்மலை, திங்கள்
கொத்மலை — திஸ்பனை தோட்ட தமிழ் கலவன்பாடசாலையில் கலைமகள் விழா திரு. ஆர். ஜே. எல். ரூடி தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மேற்படிவிழாவை திரு. ரூடி சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அதைத்தொடர்ந்து காவடி, நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இறுதியில் கலைவிழா நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு தோட்ட உதவி நிர்வாகியாகிய திரு. ஆர். ஜே. எல். ரூடி பரிசில்கள் வழங்கினர்.

## விற்பனைக்கு

கடை
சாவகச்சேரி வேம்படிச் சந்திக்கருகாமையில் கடை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பிரெக்டர் கே. ஞானச்சந்திரன், சாவகச்சேரி அவர்களைத் தொடர்பு கொள்ளவும். 2261

# அடுத்த ஆண்டில் ஓய்வுபெறுவார்

யாழ்ப்பாணம், செவ்வாய்
“இன்று தான் நான் கடைசியாக யாழ்ப்பாணத்தில் நீதியரசராகக் கடமையாற்றுகின்றேன். இப்பருவகால விசாரணை முடிவடைந்ததும் நான் காலி அசைஸ் நீதிமன்றத்திற்குச் செல்வேன். அடுத்த ஆண்டு நான் ஓய்வு பெறுகின்றேன்.”

மேற்கண்டவாறு வடபகுதி அசைஸ் நீதியரசராகக் கடமையாற்றிய திரு. வி. மாணிக்கவாசகர், நேற்று கண்ணீர் சிந்தியபடி தெரிவித்தார்.

வடபகுதி பருவகால அசைஸ் நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றிய இவர் நேற்றுடன் நீதிமன்ற பருவ விசாரணை முடிவடைந்தபோதே இவ்வாறு தெரிவித்தார். இவரது சேவைகளைப் பாராட்டி வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன், வழக்கறிஞர் கே. இரத்தினேசர் ஆகியோரும் பேசினுர்கள். [ந. நி]

## தேநீர்க்கடை வழக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, செவ்
கொடிகாமம் தேநீர்கடை வழக்கு நேற்றுமாலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி விசாரணையை நவம்பர்மாதம் 20-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜுலை மாதம் 31-ம்திகதி கொடிகாமத்திலுள்ள தேநீர்க் கடை உரிமையாளர் குட்டிகனகசபைஎன்பவருக்கு தேநீர் கொடுக்க மறுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பரிசோதனை முகாம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்.
பூனகரி பாலத்தில் நேற்று முதல் பொலிஸ் இராணுவத்தினரைக் கொண்ட பரிசோதனை தடை முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பகுதியால் கள்ளக்கடத்தல் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம்முகாம் நிறுவப்பட்டுள்ளது. உதவி பொலிஸ் சுப்ரின்டன் திரு. வீரசிங்காவின் நேரடி மேற்பார்வையில்மூன்றுபொலிஸ் கான்டபிள்களும் மூன்று இராணுவ உத்தியோகத்தர்களும் இங்கு கடமையாற்றுவார்கள். (ந. நி]

## பூரணை விழா

யாழ்ப்பாணம், செவ்.
காரைநகர் மணற்காடு அம்பாள் கோவிலில் பூரணை விழா நாளைமாலை நடைபெறவிருக்கிறது. யாழ். நல்லூர் நியாயசிரோன்மணிபிரமஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ‘ஆயிரத்தில்ஒருவா’ என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார். பகல் விசேஷ அபிஷேகம் இடம்பெறும்.

## “வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை”

மன்னூர், திங்கள்
தேசிய அரசாங்கத்தினுல் கூறப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று விவசாயிகள் கூறுவதை நான் வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறதுஎன்று மன்னூர் எம்.பி.திரு.வி.ஏ. அழகக்கோன் உணவு மந்திரிக்கு விவசாயிகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்படாத கடன் சம்பந்தமாக அனுப்பிய [illegible] றில் தெரிவித்துள்ளார்.

# கொடிகாமம் சலூன்வழக்கு: தீர்ப்பு 31-ம் திகதி

யாழ்ப்பாணம், செவ்
“சம்பவம் நடந்ததினம் தலைமயிர் வெட்ட கொடிகாமத்திலுள்ள ‘நியூஸ்டார்’ சலூனுக்கு போனேன். என்னுடன் கணபதிப்பிள்ளையும், யோகராசாவும் வந்தார்கள். அந்த சலூனின் உரிமையாளர் எதிரியான சின்னுன். முடிவெட்டச்சொல்லி அவரிடம் கேட்டேன். ‘முடிவெட்டமுடியாது வெளியில் போ’ என்றுர். நான் போய் பொலிஸில் முறைப்பாடு செய்தேன்.”

கொடிகாமம் சிகை அலங்காரிப்புநிலைய வழக்கில், சாட்சியமளித்த அல்லாரைவாசியான சின்னத்தம்பிகோவிந்தன் மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜுலை மாதம் 26-ம் தேதி கொடிகாமம் சலூன் ஒன்றின் உரிமையாளரான கதிர்காமன் சின்னுன் என்பவர்,அல்லாரையைச்சேர்ந்த சின்னத்தம்பி கோவிந்தனுக்கு முடிவெட்ட மறுத்தாரெனசாவகச்சேரிபொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ். இராசதுரை, புறக்டர் கே. ஞானச்சந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானுர். வழக்காளி தரப்பில் அட்வகேட் எம். ஆலால சுந்தரம், புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடனும், சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடனும் ஆஜரானுர்.

எதிரியின் வழக்கறிஞர் கே. இராசதுரை, குறுக்கு விசாரணை செய்த போது கோவிந்தன் கூறியதாவது: கொடிகாமத்திற்கும் அல்லாரைக்கும் முக்கால் மைல் தூரம். முதன்முதலாக அன்றுதான் இந்த சலூனுக்கு போனேன். முன்பு போகவில்லை.

வழ: ஸ்டார் சலூன் எவ்வளவு காலமாக இருக்கிறது?-ஒரு வருடமாக.

வழ: ஒரு வருடமாக அங்கு ஏன் போகவில்லை? சாவகச்சேரி வசதி.

வழ: உமது சீவிய காலத்தில் கொடிகாமத்தில் மயிர் வெட்டவில்லை? -இல்லை.

வழ: யோகராசாவை சாட்சியாக கூட்டிச்சென்றீரா? - வெட்ட மறுப்பார் என்று தெரியாது.

வழ: நீர் தனிய சலூனுக்கு போயிருந்தால் சாட்சிகிடையாது? ஆம்.

செல்லன் கணபதிப்பிள்ளை கூறியதாவது: கொடிகாமத்தில் எங்கள்சமூகத்தவருக்கு புறம்பான சலூன் உண்டு. அந்த சலூன் திங்கள், புதன், வெள்ளிதான் திறப்பது வழக்கம். அவர் வெட்டுகிறது சரியில்லை. அதனுல் சாவகச்சேரிக்குசெல்வோம். கொடிகாமத்தில் முன்பு வெட்டுவதில்லை. எல்லாருக்கும் வெட்டுவதாக அறிந்து அன்று போனேம்.

கச்சாய் கிராமசபை வருமானவரி உத்தியோகஸ்தர் சி. மாணிக்கவாசகர் கொடிகாமத்தில் தேநீர் கடைகளுக்கு மட்டும் வரிஅறவிடப்படுவதாகவும், சலூனுக்கு வரி அறவிடப் படுவதில்லையென்றும் சலூனுக்கு லைசென்சு வழங்குவதில்லையென்றும் கூறினுர்.

சலூன் உரிமையாளரான கதிர்காமர் சின்னர் கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் கோவிந்தன் சலூனுக்கு வந்தார். அவருடன் மூன்றுபேர்வந்தார்கள். சவரம் செய்யும்படி கேட்டார். ‘கடையில் மூன்று நான்கு பேர் காத்திருக்கிறுர்கள் நேரம் செல்லும் என்றுகூறினேன். ‘என்னடா கலியாண சலூன் நடப்போ’ என்று கூறிவிட்டு போனுர்கள். வெளியில் 25 அல்லது 30 பேர் பார்த்துக் கொண்டு நின்றுர்கள்.

சி. கணபதிப்பிள்ளை சாட்சியமளித்தபோது, சம்பவம் நடந்த தினம் தான் ‘சேவ்’ எடுப்பிக்க அங்கு சென்றதாகக் கூறினுர்.

விசாரணை முடிவில் இம் மாதம் 31-ம் தேதி தீர்ப்பு வழங்குவதாக மாஜிஸ்டிரேட் கூறினுர்.

## சிகிரியா ஓவியங்கள் திருத்த முடியும்

கொழும்பு, திங்கள்
சிகிரியாவில் சேதப்படுத்தப்பட்டுள்ள பிரசித்திவாய்ந்த சுவரோவியங்களில் பலவற்றையும் மீண்டும்முன்னிருந்த நிலைக்குக்கொண்டுவர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களில் 2 முற்றுக அகற்றப்பட்டுவிட்டதாகவும் 15 சேதமுற்றிருப்பதாகவும் தெரிகின்றது. இந்த சேதத்தினுல் அதிக நஷ்டமில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியங்கள் அண்மையில் இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

## தென் சென்னையில் செப். 7-ம் திகதி தேர்தல்

சென்னை, அக். 16
தென் சென்னை லோகசபை தொகுதியில் அடுத்த மாதம் ஏழாம் திகதி தேர்தல் நடக்கும். இத்தொகுதியில் முன்னர் தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு. சி.என். அண்ணுதுரை ராஜினாமா செய்ததால் இத்தொகுதியில் இப்பொழுது தேர்தல் நடைபெயவிருக்கின்றது.

## ஜோர்தானில் இந்திய வர்த்தக தூதுகோஷ்டி

அம்மான், ஒக். 16
இந்திய வர்த்தக தூதுகோஷ்டி ஒன்று ஜோர்தானுக்கு விஜயம் செய்துள்ளது. அது இந்தியாவுக்கும் ஜோர்தானுக்கு மிடையேயான வர்த்தக பொருளாதாரத் தொடர்புகளைவலுப்படுத்த வழிவகைகளை ஆராயும். இத் தூதுகோஷ்டி சிரியாவுக்கும் ஈராக்குக்கும் விஜயம் செய்யவிருக்கிறது.

## ஆட்சேபம்

புன்னுலைக்கட்டுவன்,திங்.
கடந்த வெள்ளி பிற்பகல் உரும்பராய் இந்துக் கல்லூரிச்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 6-0 கோல்களால் வென்றதைத் தொடர்ந்து மேற்படி போட்டியிற் பல அசம்பாவிதங்களும், விதிக்குமுரணுன சம்பவங்களும் நடந்ததாக, யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தலைவருக்கு ஓர் ஆட்சேபக்கடிதம் அனுப்பப் பட்டுள்ளதாகத்தெரிகிறது.

வவனியா
யாழ்ப்பாணம், வவனியா பொலநறுவை, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தவறுன களைகொல்லி மருந்தைத் தெளித்ததால் ஏறக்குறைய 25 ஆயிரம் ஏக்கர் நெல்விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org